மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 376, திரு. செ. பெருமாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

376—

கருமந்துறையை மையமாகக் கொண்டு ஆட்டுப்பண்ணை அமைத்தல்

*9414—திரு. செ. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கருமந்துறையை மையமாகக் கொண்டு ஆட்டுப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருமந்துறையை மையமாகக் கொண்டு ஒரு ஆட்டுப் பண்ணை எனது தொகுதியில் வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேள்வி கேட்டபோது, இல்லை என்று பதில் வந்திருக்கிறது. என்னுடைய தொகுதியானது கருமந்துறையை உள்ளடக்கி 80 கிராமங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கு, ஐ.ஆர்.டி.பி., ஐ.யு.டி.பி. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக லோன் வாங்க வேண்டியிருப்பதால் சொசைட்டிக்கு, அதாவது மேச்சேரி சொசைட்டிக்கு சென்று சான்றிதழ் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைத் தவிர்த்து அதிகாரிகள் மூலமாக அவர்களுக்கு சர்ட்டிபிகேட் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். அத்தோடு, அவர்கள் லோன் வாங்க வேண்டுமென்றால் பக்கத்திலே இருக்கின்ற டிஸ்டிரிக்டுக்குச் சென்று ஆடு, மாடு லோன் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, அதைத் தவிர்த்து சொந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு அந்த லோனை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ஞ. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு உட்பட எந்தவொரு இடத்திலும் தனியாக ஆட்டுப் பண்ணை அமைக்கத் தேவையான நிலங்களும் தண்ணீர் வசதியும் இதர வசதிகளும் இருக்குமேயானால் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, ஆட்டுப் பண்ணை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றி அரசு ஆராயும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, ஆடு வளர்ப்பதற்கு கடன் பெறுகின்றவர்களுக்கு அதற்குரிய சான்றிதழ்கள் வழங்கக் கூடிய அதிகாரிகள் அந்த இடத்திற்கே வந்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 377, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

377—

அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகத்தின் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்கள்

*11684—திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகம் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடத்தை அக்கட்டிடம் கட்டும்போதே கட்டுபவரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சிச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் அனுமதியில்லாத மற்றும் அனுமதிக்கு முரணாகக் கட்டப்படும் கட்டிடங்களின் மீது கட்டுமானம் நடந்து கொண்டு இருக்கும்போதே நடவடிக்கை எடுக்க வழிமுறைகள் உள்ளன. மேலும் அனுமதியில்லாத மற்றும் அனுமதிக்கு முரணாகக் கட்டப்படும் கட்டிடங்களின் மீது நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ல் வழிமுறைகள் உள்ளன. மேற்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு வரும்போது, இச்சட்டத்தில் வேலை